சுருக்கம்

பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005 – கோவிட்–19 – 2019–2020–ஆம் கல்வியாண்டிற்கான தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு அகமதிப்பீட்டு தேர்வு – மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் / ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் / அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் / அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பயிற்சி மாணவர்களுக்கான அகமதிப்பீட்டு தேர்வினை 02.11.2020 முதல் 06.11.2020 வரை நடத்த அனுமதி மற்றும் நிலையான செயல்பாட்டு வழிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே 4)த்துறை

அரசாணை (நிலை) எண். 612 நாள் 31.10.2020

சார்வரி, ஐப்பசி 15,
திருவள்ளுவராண்டு 2051
படிக்கப்பட்டவை

1) அரசாணை (நிலை) எண்.438, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 24.08.2020.
2) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் கடித ந.க.எண்.3013/இ2/2020, நாள் 15.09.2020 மற்றும் 19.10.2020.

*** *** ***

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இன்னபிறவற்றுள், தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வுகள் முதலாமாண்டிற்கு 21.09.2020 முதல் 28.09.2020 வரையிலும், இரண்டாமாண்டிற்கு 29.09.2020 முதல் 07.10.2020 வரையிலும் நிலையான செயல்பாட்டு வழிமுறைகளைப் (SOP) பின்பற்றி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. அதனைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழகத்திலுள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு பயிலும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பயிற்சி மாணவர்களுக்கான அகமதிப்பீட்டு தேர்வினை 02.11.2020 முதல் 06.11.2020 வரை நடத்துவதற்காக தேர்வு நடைபெறும் மையங்களின் விவரம், அகமதிப்பீட்டுத் தேர்வு குழுவிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) மற்றும் தேர்வு மையங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றினை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்

பயிற்சி நிறுவன இயக்குநர் தெரிவித்து அகமதிப்பீட்டுத் தேர்வினை நடத்த அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவை ஏற்று, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு பயிலும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பயிற்சி மாணவர்களுக்கு அகமதிப்பீட்டு தேர்வினை 02.11.2020 முதல் 06.11.2020 வரை இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான செயல்பாட்டு வழிமுறைகளைப் பின்பற்றி நடத்திட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை, சென்னை – 600 009.
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600 006

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

## தொடக்கக் கல்வி பட்டய படிப்பு அகமதிப்பீட்டு தேர்வுக்கான நிலையான செயல்பாட்டு வழிமுறைகள் (Standard Operating Procedure)

### I .அகமதிப்பீட்டுத் தேர்வு குழுவிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

(1) ஒவ்வொரு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு அகமதிப்பீட்டுத் தேர்வுப் பணியினை மேற்கொள்ளும். இதில் ஒருவர் தலைவராகவும், இருவர் உறுப்பினர்களாகவும் செயல்படுவர். மாணவர்கள் எண்ணிக்கை 50க்கு மேல் இருந்தால் ஒரு உறுப்பினரை கூடுதலாக சேர்த்து குழு எண்ணிக்கை நான்காக அமைத்துக் கொள்ள வேண்டும்.

(2) மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனம், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் அகமதிப்பீட்டுத் தேர்வுப் பணியினை மேற்கொள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட குழு அமைத்து பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். அட்டவணையில் அந்தந்த மாவட்டத்திற்கு எதிரே அகமதிப்பீட்டுத் தேர்வுப் பணியினை மேற்கொள்ள வேண்டிய மாவட்டத்தின் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கேற்றவாறு இப்பணியினை சிறப்பாக நடத்திட அனைத்து முதல்வர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(3) அனைத்து தேர்வாளர்களும் அகமதிப்பீட்டுத் தேர்வு நடைபெறும் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட நாளில் காலை 8.30 மணிக்கு சென்றடைதல் வேண்டும்.

(4) 50–60 நபர் பயிலும் நிறுவனமாக இருந்தால் அகமதிப்பீட்டுத் தேர்வினை ஒரு நாளிலும் 100 நபருக்கு மேல் பயிலும் நிறுவனமாக இருந்தால் அகமதிப்பீட்டுத் தேர்வினை இரண்டு நாளிலும் முடித்தல் வேண்டும்.

(5) 15 நபர்களுக்கு குறைவான எண்ணிக்கையில் மாணவர்கள் இருந்தால் அம்மாணவர்களை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு அல்லது அனைத்து வசதிகளும் கொண்ட மையத்தில் அகமதிப்பீட்டுத் தேர்வினை நடத்திட சார்ந்த முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(6) நிறுவனத்திற்கு சென்றவுடன் எத்தனை மாணவர்கள் அந்த நிறுவனத்தில் பயில்கிறார்கள் என்ற விவரத்தை சரிபார்த்து அவர்கள் அனைவரும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன ஏற்பினைப் பெற்றிருக்கிறார்களா என்பதை உறுதி செய்தல் வேண்டும். இதில் ஏதேனும் ஐயப்பாடுகள் இருந்தால் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தெளிவு பெற்றபின் ஏற்பு வழங்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு மட்டுமே தேர்வு நடத்த வேண்டும்.

(7) நிறுவனத்திற்கு சென்றவுடன் முதல் கட்டமாக மாணவ, மாணவியர்கள் நிறுவனத்திற்கு வருகை தந்தமைக்கான வருகைப் பதிவேடு, உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல்

பயிற்சிக்குச் சென்றமைக்கான வருகைப் பதிவேடு ஆகியவற்றைச் கூர்ந்தாய்வு செய்தல் வேண்டும்.

(8) 50 நபர் பயிலும் நிறுவனமாக இருந்தால் தேர்வுக் குழுவில் உள்ள மூன்று உறுப்பினர்களும் 17, 17, 16 என்ற அளவில் மாணவ, மாணவியர்களை மூன்று குழுக்களாகப் பிரித்துக் கொண்டு அகமதிப்பீட்டுத் தேர்வினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(9) முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி பயிலும் மாணவர்கள் உற்று நோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சியை 48 நாள்கள் முடித்திருத்தல் வேண்டும். முதலாமாண்டு மாணவர்கள் 48 நாள்களில் 40 நாட்கள் மட்டும் உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சி முடித்திருந்தால் அம்மாணவர்கள் அடுத்த ஆண்டு நடைபெறும் இரண்டாம் ஆண்டு அகமதிப்பீட்டு தேர்வின் போது 48 நாட்களுடன் கூடுதலாக எட்டு நாட்களும் முடித்தல் வேண்டும்.

(10) தேர்வு நடைபெறும் அன்று காலை 9.30 மணி முதல் 1.30 மணி வரை மாணவ, மாணவியர்கள் கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளுதல் வேண்டும். அதனைக் குழு உறுப்பினர்கள் கூர்ந்தாய்வு செய்தல் வேண்டும்.

(அ) முதன்மை பாடங்களுக்கான 25 மதிப்பெண்களையும் அதற்குரிய உட்கூறுகளின் அடிப்படையில் சரிபார்த்தல் வேண்டும்.

(ஆ) செயல்வழிக் கற்றல் முறையில் ஆசிரியர் பயிற்சி மாணவ, மாணவியர்கள் பெற்றுள்ள திறன், வகுப்பறையைக் கையாளும் முறை ஆகியவற்றை TP-1 முதல் TP-5 வரை உள்ள படிவங்களை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் (பத்து மதிப்பெண்களை ஒதுக்கலாம்) ஆசிரியர் பயிற்சி மாணவ மாணவியர்களிடம் வினாக்களை எழுப்பி விடை பெறுதல் வேண்டும். ஒவ்வொரு மாணவ மாணவியருக்கும் ஐந்து நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வொரு மாணவ, மாணவியரும் குறைந்தது பத்து நிமிடங்கள் ஐந்தாம் வகுப்பு பாடம் எடுத்தல் வேண்டும். மாணவ, மாணவியர்கள் எந்த பாடத்தில் வகுப்பு எடுக்க வேண்டும் என்பதைக் கீழ்க்கண்ட வகையில் தீர்மானித்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு குழுவில் 17 மாணவ, மாணவியர்கள் இருந்தால் 17 துண்டு சீட்டுகளை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். நான்கு துண்டு சீட்டுகளில் தமிழ் என்றும், நான்கு துண்டு சீட்டுகளில் ஆங்கிலம் என்றும், மூன்று துண்டு சீட்டுகளில் கணிதம் என்றும், மூன்று துண்டு சீட்டுகளில் அறிவியல் என்றும், மூன்று துண்டு சீட்டுகளில் சமூக அறிவியல் என்றும் எழுதுதல் வேண்டும். எந்த மாணவருக்கு எந்த பாடம் சீட்டில் வருகிறதோ அந்தப் பாடத்தில் அவர் வகுப்பு எடுக்க வேண்டும்.

ஒரு மாணவன் கற்பித்தலை மேற்கொள்ளும்போது சக மாணவர்களைக் குழந்தைகளாகப் பாவித்து வகுப்பு எடுக்க வேண்டும். அவ்வாறு பாடம் எடுக்கும்போது குழந்தைகளை மையப்படுத்திய வகுப்பறையாக அந்த வகுப்பறை உள்ளதா என்பதையும், குழந்தைகள் வினாக்கள் கேட்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்களா என்பதையும், குழந்தைகள் குழுவாக அமர்ந்து கற்பதற்கு வாய்ப்புகள் அளிக்கப்படுகிறதா என்பதையும் கவனித்தல் வேண்டும்.

(இ) கற்பித்தல் பயிற்சிக்கென 30 மதிப்பெண்கள் வழங்கப்படல் வேண்டும். முதல் மற்றும் இரண்டாம் கட்ட பயிற்சியில் ஈடுபட்டபோது மாணவ, மாணவியர்கள் செயல்பட்ட விதம், அவர்கள் காட்டிய ஆர்வம், வகுப்பு எடுத்த விதம், குழந்தைகளிடம் நடந்து கொண்ட

முறை, அங்கு பணிபுரியும் ஆசிரியர்களோடும், தலைமை ஆசிரியர்களோடும் பழகிய விதம் ஆகியவற்றை மையமாக வைத்து மதிப்பெண்கள் வழங்கப்படுதல் வேண்டும். TP-6 படிவத்தையும் மதிப்பெண்கள் வழங்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். விரிவுரையாளர்கள் கற்பித்தல் பயிற்சியின்போது மேற்கொண்ட பார்வையில் (TP-8) அடிப்படையிலும் மதிப்பெண்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

1. தொடக்கநிலை செயல்கள் – 10 மதிப்பெண்கள்
2. வகுப்பறை மேலாண்மை – 10 மதிப்பெண்கள்
3. குழுவில் மாணவ ஆசிரியர் செயல்கள் –10 மதிப்பெண்கள்

ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக மதிப்பெண்கள் தயாரித்தல் வேண்டும்.

(ஈ) எஞ்சியுள்ள 20 மதிப்பெண்கள் குழு கற்பித்தலுக்கென வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி மாணவ, மாணவியர்கள் கற்பித்தல் பயிற்சிக்கென சென்றிருந்தபோது அவர்கள் பூர்த்தி செய்து கொடுத்த TP-7 படிவம் மற்றும் TP-10 படிவம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறு மதிப்பெண்கள் வழங்கும்போது கற்பித்தல் பயிற்சி மேற்கொண்ட பள்ளிகளில் குழுவாக செயல்பட்ட மாணவ ஆசிரியர்களைக் குழு வாரியாக அழைத்து அவர்களைக் கலந்துரையாடச் செய்து, அந்த கலந்துரையாடல் அடிப்படையில் ஒவ்வொரு மாணவ ஆசிரியருக்கும் தனித்தனியாக மதிப்பெண்கள் வழங்குதல் வேண்டும்.

(11) மாலை 2.30 மணி முதல் 5.00 மணி வரை மாணவ, மாணவியர்கள் தேர்வுக்கு முன்னிலைப்படுத்தும் பயிற்சி ஏடுகள், ஆவணங்கள், கற்றல் கற்பித்தல் பொருள்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தல் வேண்டும். மாணவ, மாணவியர்கள் முன்னிலைப்படுத்திய ஆவணங்களுக்கேற்ப மதிப்பெண்கள் அந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதா என்பதை அந்நிறுவனத்தில் பராமரிக்கப்படும் (E1-1 முதல் E-7 இணைப்பு வரையிலான) படிவங்களை சரிபார்த்தல் வேண்டும். சரியான மதிப்பெண்கள் வழங்கப்படாமல் இருந்தால் ஆவணங்களின் அடிப்படையில் மதிப்பெண்களைக் கூட்டவோ, குறைக்கவோ குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(12) தேர்வு முடிந்த மாணவ, மாணவியர்களின் பயிற்சி ஏடுகள் மற்றும் ஆவணங்களில் உறுப்பினர் கையொப்பமிட்டு அவருடைய அலுவலக முத்திரையை பதித்தல் வேண்டும். பின்னர் ஆணியால் துளையிட்ட பின்பே மாணவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

(13) மேற்கண்ட முறையில் அகமதிப்பீட்டுத் தேர்வு முடிந்தவுடன் மதிப்பெண் பட்டியல்கள் தயாரித்தல் வேண்டும். மதிப்பெண் பட்டியல் தயாரிக்கும்போது குழு உறுப்பினர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்படுதல் வேண்டும்.

(14) மதிப்பெண் பட்டியல்களை பூர்த்தி செய்தவுடன் கவனமாகப் படித்துப் பார்த்து குழுத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மூவருமே கையொப்பமிடல் வேண்டும். அலுவலக முத்திரையை (Office Stamp) பதித்தல் வேண்டும்.

(15) எழுத்துத் தேர்வு பாடங்களின் மதிப்பெண்களை 25 மாணவர்களுக்கு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். செய்முறைப் பயிற்சி மற்றும் கற்பித்தல் பயிற்சிக்கான தரவரிசையை, 25 மாணவர்களுக்கு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். ஒவ்வொரு

நிறுவனத்தின் மதிப்பெண் பட்டியலையும் ஒரு தனி உறையில் வைத்து, அரக்கு முத்திரை வைத்தல் வேண்டும். பின்பு அதன் மேல் பகுதியில் அந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி, சம்பந்தப்பட்ட பாடத்தின் பெயர் அதற்கான குறியீட்டு எண் ஆகியவற்றை எழுதுதல் வேண்டும்.

(16) பின்பு மேற்கண்ட முறையில் பெறப்பட்ட உறையில் வைத்து அரக்கு முத்திரை வைத்தல் வேண்டும். அதன் வெளிப் பகுதியில் அகத்தேர்வு நடைபெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி, அரசுத் தேர்வாளர்களின் பெயர் மற்றும் முகவரி (தொலைபேசி எண்ணுடன்) ஆகியவை குறிக்கப் பெறுதல் வேண்டும்.

(17) ஒரு குழுவினர் மூன்று அல்லது நான்கு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்குச் சென்று அகமதிப்பீட்டுத் தேர்வினை மேற்கொள்ள உள்ளனர். முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுக்கான அகமதிப்பீட்டுத் தேர்வுகள் நவம்பர் 2ம் தேதி தொடங்கி நவம்பர் 6ம் தேதியன்று முடியும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. நவம்பர் 9ம் தேதியன்று மதிப்பெண் பட்டியலை நிறுவனம் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரிடம் ஒப்படைக்க வேண்டும். இந்நிகழ்வில் எந்தவித புகாருக்கும் இடமின்றி குழு தலைவர் மதிப்பெண் பட்டியலை ஒப்படைக்க கேட்டு கொள்ளப்படுகிறார். அதாவது ஒரு குழு மூன்று ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்குச் சென்று அகமதிப்பீட்டுத் தேர்வினை மேற்கொண்டால் மூன்று பெரிய சீலிடப்பட்ட உறைகளை முதல்வரிடம் ஒப்படைத்தல் வேண்டும். மதிப்பெண் பட்டியலை ஒப்படைக்கும் நாளன்றே தேர்வாளர்களுக்கான பயணப்படியை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் வழங்குதல் வேண்டும்.

(18) அகமதிப்பீட்டினை மேற்கொள்ளும் தேர்வாளர்களுக்கான பயணப்படியை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் நிறுவன வசதி நிதியிலிருந்து தற்காலிகமாகப் பெற்று வழங்கிடுமாறு அறிவிக்கப்படுகிறது. அரசிடமிருந்து பயணப்படிக்கான நிதி பெற்றவுடன் வசதி நிதியில் அத்தொகையினைச் செலுத்தி விடுதல் வேண்டும்.

(19) மேற்கண்ட சுற்றறிக்கையை அனைத்து வகையான ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கும் அனுப்பி கையொப்பம் பெற்று கோப்பில் வைத்திடல் வேண்டும். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பணிபுரியும் விரிவுரையாளர்கள் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்களுக்கும் சுற்றறிக்கையின் நகலினைக் கொடுத்து பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலினைப் பெற்று கோப்பில் வைத்தல் வேண்டும்.

(20) மேற்கண்ட சுற்றறிக்கையை அனைத்து வகையான ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கும் அனுப்பி கையொப்பம் பெற்று கோப்பில் வைத்திடல் வேண்டும். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பணிபுரியும் விரிவுரையாளர்கள் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்களுக்கும் சுற்றறிக்கையின் நகலினை கொடுத்து பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலினைப் பெற்று கோப்பில் வைக்க வேண்டும்.

II. <u>அகமதிப்பீட்டுத் தேர்வு மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்</u>

- அகமதிப்பீட்டுத் தேர்வு எழுத உள்ள தேர்வர்களின் பாதுகாப்பு நலன் கருதி தேர்வு தொடங்குவதற்கு முன்பு அகமதிப்பீட்டு தேர்வு மையங்களில் உள்ள தேர்வறைகள் மற்றும் தேர்வுப் பணி நடைபெறும் அறைகள் ஆகியவற்றில் உள்ள மேசை, நாற்காலி, இருக்கைகள் ஆகியவற்றில் கிருமி நாசினி (Hand Sanitizer) தெளிப்பதற்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- அகமதிப்பீட்டுத் தேர்வு பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள்/தேர்வர்கள் தேர்வறைக்கு செல்லும் முன்பும், அகமதிப்பீட்டு தேர்வு முடிவுற்ற பின்பும் கைகளை சோப்பு (Soap) / கிருமி நாசினி (Hand Sanitizer) கொண்டு சுத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அகமதிப்பீட்டுத் தேர்வு மையத்திற்குள் நுழைவதற்கு முன்பு தேர்வர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரையும் தெர்மல் ஸ்கேனர் (Thermal Scanner) மூலம் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.
- அகமதிப்பீட்டுத் தேர்வுக்கு வருகைபுரியும் தேர்வர்கள் மற்றும் தேர்வுப் பணிகளில் ஈடுபடும் அனைத்து நிலைப் பணியாளர்கள்/ஆசிரியர்கள் அனைவரும் கண்டிப்பாக முகக்கவசம் (Mask) அணிந்திருப்பதை தேர்வு மைய மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- தேர்வர்களை சமூக இடைவெளியுடன் தேர்வு தொடங்கும்வரை தனிஅறைகளில் அமர ஏற்பாடு செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு தேர்வறையிலும் கிருமிநாசினி (Hand Sanitizer) இருப்பதை தேர்வு மைய மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- தேர்வு மைய வளாகத்திற்குள் தேர்வர்கள் கூட்டமாக/குழுவாக இல்லாமல் சமூக இடைவெளியை (Social Distancing) பின்பற்றுவதை தேர்வு மைய மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- அதற்கேற்ப தேர்வுமைய வளாகத்தில் பல இடங்களில் தேர்வு நடைபெறக்கூடிய தேர்வறைகளின் வரைபடம் (Seating Plan) தெளிவாக ஒட்டப்படுதல் வேண்டும்.
- அகமதிப்பீட்டுத் தேர்வு மையத்தில் ஒரு தேர்வறையில் தற்போது 10 தேர்வர்கள் மட்டுமே அமர வைக்கப்பட வேண்டும்.

**க.சண்முகம்**
**அரசு தலைமைச் செயலாளர்.**

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

அட்டவணை

**அகமதிப்பீடு தேர்வு சார்ந்து நடத்தப்பட வேண்டிய தேர்வு மையங்களின் விவரம்**

| வரிசை எண். | அகமதிப்பீடு நடைபெறும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பெயர் | அகமதிப்பீடு நடத்த வேண்டிய மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | Ariyalur | Trichy |
| 2 | Chennai | Tiruvallore |
| 3 | Coimbatore | Erode |
| 4 | Cuddalore | Nagappattinam |
| 5 | Dharmapuri | Salem |
| 6 | Dindigul | Madurai |
| 7 | Erode | Namakkal |
| 8 | Kanchipuram | Chennai |
| 9 | Kanniyakumari | Thoothukudi |
| 10 | Karur | Salem |
| 11 | Krishnagiri | Vellore |
| 12 | Madurai | Theni |
| 13 | Nagappattinam | Thiruvarur |
| 14 | Namakkal | Karur |
| 15 | Perambalur | Thanjavur |
| 16 | Pudukkottai | Sivagangai |
| 17 | Ramnad | Pudukkottai |
| 18 | Salem | Krishnagiri |
| 19 | Sivagangai | Virudunagar |
| 20 | Thanjavur | Ariyalur |
| 21 | The Nilgiris | Tiruppur |
| 22 | Theni | Dindigul |
| 23 | Tiruvallore | Kanchipuram |
| 24 | Tiruvannamalai | Villupuram |

| | | |
|---|---|---|
| 25 | Thiruvarur | Thanjavur |
| 26 | Thoothukudi | Tirunelveli |
| 27 | Tiruppur | Coimbatore |
| 28 | Tirunelveli | Kanniyakumari |
| 28 | Trichy | Perambalur |
| 30 | Vellore | Cuddalore |
| 31 | Villupuram | Tiruvannamalai |
| 32 | Virudunagar | Tirunelveli |
| 33 | Puduchery | Cuddalore |
| 34 | Karaikkal | Nagappattinam |

க. சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்